ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# குலசேகரப்பெருமாள் அருளிச்செய்த பெருமாள் திருமோழி

# 4 – ஊனேறு

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 4 – ஊனேறு

‡ ஊன் ஏறு செல்வத்து ⋆
உடற் பிறவி யான் வேண்டேன் ⋆
ஆன் ஏறேழ் வென்றான் ⋆
அடிமைத் திறம் அல்லால் ⋆
கூனேறு சங்கம் இடத்தான் தன் ⋆
வேங்கடத்துக் ⋆
கோனேரி வாழும் ⋆
குருகாய்ப் பிறப்பேனே ‖ **4.1** ‖

ஆனாத செல்வத்து ⋆
அரம்பையர்கள் தற் சூழ ⋆
வான் ஆளும் செல்வமும் ⋆
மண் அரசும் யான் வேண்டேன் ⋆
தேன் ஆர் பூஞ்சோலைத் ⋆
திருவேங்கடச் சுனையில் ⋆
மீனாய்ப் பிறக்கும் ⋆
விதி உடையேன் ஆவேனே ‖ **4.2** ‖

பின்னிட்ட சடையானும் ⋆
பிரமனும் இந்திரனும் ⋆
துன்னிட்டுப் புகல் அரிய ⋆
வைகுந்த நீள் வாசல் ⋆
மின் வட்டச் சுடர் ஆழி ⋆

வேங்கடக்கோன் தான் உமிழும் ⋆
பொன் வட்டில் பிடித்துடனே ⋆
புகப் பெறுவேன் ஆவேனே ॥ **4.3** ॥

ஒண் பவள வேலை ⋆
உலவு தண் பாற்கடலுள் ⋆
கண் துயிலும் மாயோன் ⋆
கழல் இணைகள் காண்பதற்கு ⋆
பண் பகரும் வண்டினங்கள் ⋆
பண் பாடும் வேங்கடத்துச் ⋆
செண்பகமாய் நிற்கும் ⋆
திருவுடையேன் ஆவேனே ॥ **4.4** ॥

கம்ப மத யானை ⋆
கழுத்தகத்தின் மேல் இருந்து ⋆
இன்பமரும் செல்வமும் ⋆
இவ் அரசும் யான் வேண்டேன் ⋆
எம் பெருமான் ஈசன் ⋆
எழில் வேங்கட மலை மேல் ⋆
தம்பகமாய் நிற்கும் ⋆
தவம் உடையேன் ஆவேனே ॥ **4.5** ॥

மின் அனைய நுண் இடையார் ⋆
உருப்பசியும் மேனகையும் ⋆
அன்னவர்தம் பாடலொடும் ⋆
ஆடல் அவை ஆதரியேன் ⋆
தென்னவென வண்டினங்கள் ⋆
பண் பாடும் வேங்கடத்துள் ⋆

அன்னனைய பொற்குவடாம் ⋆
அருந்தவத்தென் ஆவேனே ॥ **4.6** ॥

வான் ஆளும் மா மதி போல் ⋆
வெண் குடைக் கீழ் ⋆
மன்னவர் தம் கோன் ஆகி வீற்றிருந்து ⋆
கொண்டாடும் செல்வறியேன் ⋆
தேனார் பூஞ்சோலைத் ⋆
திரு வேங்கட மலை மேல் ⋆
கான் ஆறாய்ப் பாயும் ⋆
கருத்துடையேன் ஆவேனே ॥ **4.7** ॥

பிறை ஏறு சடையானும் ⋆
பிரமனும் இந்திரனும் ⋆
முறையாய பெரு வேள்விக் ⋆
குறை முடிப்பான் மறை ஆனான் ⋆
வெறியார் தண் சோலைத் ⋆
திரு வேங்கடமலை மேல் ⋆
நெறியாய்க் கிடக்கும் ⋆
நிலை உடையேன் ஆவேனே ॥ **4.8** ॥

‡ செடியாய வல்வினைகள் ⋆
தீர்க்கும் திருமாலே ⋆
நெடியானே ! வேங்கடவா ! ⋆
நின் கோயிலின் வாசல் ⋆
அடியாரும் வானவரும் ⋆
அரம்பையரும் கிடந்தியங்கும் ⋆

படியாய்க் கிடந்து ⋆
உன் பவளவாய் காண்பேனே ‖ **4.9** ‖

உம்பர் உலகாண்டு ⋆
ஒரு குடைக் கீழ் உருப்பசி தன் ⋆
அம் பொற் கலை அல்குல் ⋆
பெற்றாலும் ஆதரியேன் ⋆
செம் பவள வாயான் ⋆
திருவேங்கடம் என்னும் ⋆
எம் பெருமான் பொன் மலை மேல் ⋆
ஏதேனும் ஆவேனே ‖ **4.10** ‖

‡ மன்னிய தண் சாரல் ⋆
வட வேங்கடத்தான் தன் ⋆
பொன் இயலும் சேவடிகள் ⋆
காண்பான் புரிந்திறைஞ்சி ⋆
கொன்னவிலும் கூர்வேல் ⋆
குலசேகரன் சொன்ன ⋆
பன்னிய நூல் தமிழ் வல்லார் ⋆
பாங்காய பத்தர்களே ‖ **4.11** ‖

அடிவரவு — ஊன் ஆனாத பின்னிட்ட ஒண் கம்பம் மின் வான் பிறை செடி உம்பர் மன்னிய தரு

ஊனேறு முற்றிற்று

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்